## உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் -2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட ரூபா 94,000 தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 326,119 தொகையான விளையாட்டுப் பொருட்கள் என்பன 2009 பெப்ரவரி 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலினால் அழிவடைந்திருந்ததுடன் எஞ்சிய ரூபா 267,719 தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்களை இனங்காண்பதற்கு உரிய சான்றுகள் காணப்படவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 03.2 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடற்ற நிதியத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2006 ஆம் ஆண்டு முதல் ஊக்குவிப்பு செலவினத் தலைப்பு ஏற்பாட்டின் மூலம் செலுத்தப்பட்டதன் காரணமாக உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் செயற்படுகின்ற நிதியமாக இல்லாதிருந்த போதிலும் அந்நிதியத்தை மூடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 5,109,075 தொகையான காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய சகல விபரங்களையும் காண்பிக்கின்ற வகையில் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வீடமைப்பு நலன்புரித் திட்டக் கடன் கட்டுப்பாடு

(ஆ) நிலையான சொத்து முகாமைத்துவம்

(இ) நிதியத்தை மூடுவதற்கான நடைமுறைகள்